# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP. No.25/2018** **Date: 16.12.2022**

பெயர் - தாமரைக்கண்ணன் - (**PW**1)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ( சத்தியபிரமாணத்தின் பேரில்)

விபத்து நடந்த சமயத்தில் நான் மேட்டுரில் இருந்து பவானி நோக்கி என்னுடைய இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனம் எந்த திசையில் வந்து கொண்டிருந்தது என்றால் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தது. 15-20 மீ தூரத்தில் முன்னால் சென்று கொண்டிருந்தது. விபத்தினால் என் வாகனத்தின் இடது மற்றும் வலது பக்கம் சேதமானது. எனக்கு முன்னால் சென்றவர் திடீரென்று வலது பக்கம் திரும்பிவிட்டார். எனக்கு முன்னால் சென்ற வாகனம் நேராகதான் சென்றது எனவும், நான் தான் அவரை முந்தி செல்ல முயன்று அவர் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. 15-20 மீ துரத்தில் வண்டி சென்று கொண்டிருக்கும்போது திடீரென வண்டியை திருப்பினால் கூட நான் மிதமான வேகத்தில் சென்றிருந்தால் அவர் மீது வாகனம் மோதியிருக்கும் என்றால் சரியல்ல. ஆகவே நான் தான் இந்த விபத்திற்கு முழு காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் படித்து கொண்டிருந்தேனா? என்றால் இல்லை பிட்டர் வேலை பார்த்து கொண்டிருந்தேன். நான் யாரிடம் பிட்டர் வேலை பார்த்துகொண்டிருந்தேன் என்று என் மனுவில் பெயர் கூறவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் பிட்டர் வேலை செய்யவில்லை எனவும், படித்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் முதன் முதலில் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன் பின் சேலம் நியுரோ பவுண்டேசனில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்கு உள்நோயாளியாக 15 நாட்களுக்கு மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மேற்படி மருத்துவமனயில் என்னை விடுவிப்பு செய்தபின்னர் நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் மருத்துவபில்தான் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் உள்ள அனைத்து மருத்துவ ரசீதுகளையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். நான் மனுவில் சிறுநீர் கழிக்க இயலாமல் கஷ்டப்படுவதாக குறிப்பிட்டுள்ளது போல் ம.சா. 3 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதே போல் நான் தாக்கல் செய்த அறிக்கையில் மறு அறுவை சிகிச்சை செய்தால் ரூ. 2 1/2 லட்சம் செலவாகும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வேலைகளை நான் தான் செய்து வருகிறேன் என்றால், என்னால் கையினால் சாப்பிட முடியவில்லை. அவ்வாறு உதவியாளர் முலம் எனக்குரிய வேலைகளை செய்திருந்தால் அவரின் பெயர் மற்றும் செலவுகளை குறிப்பிட்டு கூறியிருப்பேன் எனவும், அதனால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்களினால் திருமண வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நிருபிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை நான் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துவருவதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிட்டராக வேலை செய்து மாதம் ரூ.25000 சம்பளம் வாங்கியதாக பொய் கூறுகிறேன் என்றும், அவ்வாறு வேலை பார்த்திருந்தால் அதற்கான

ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு பழகுனர் ஓட்டுநர் உரிமம் மட்டுமே இருந்ததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எங்கு அதிகமாக காயம் ஏற்பட்டது என்றால் பின்கழுத்து, தலை, தண்டுவடம் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது. நான் தலைக்கவசம் அணியாமல் சென்றதால்தான் எனக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்டுள்ளது எனவும், தலைக்கவசம் அணிந்துசென்றிருந்தால் தலையில் அடிபட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது மேட்டுரில் உள்ள ஐடிஐ நிறுவனத்தில் படித்துக்கொண்டிருந்ததால் எந்த வருமான இழப்பும் ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அதிக இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/- தாமரைக்கண்ணன்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.